Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | STC 47/2023 |
| Deposition of witness for | :: | PW. 3 |
| Name | :: | சுமதி |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2024

---

எதிரி ஆஜர் .
24.06.2024
முதல் விசாரணை:

1. நான் தற்போது பரளச்சி அருகில் உள்ள ராஜகோபாலபுரத்தில் குடியிருந்து போட்டி தேர்விற்காக படித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 16.01.2023 ம் தேதி காலை 11.00 மணியளவில் எனது அண்ணன் சரவணக்குமார் பெட்ரோல் வாங்குவதற்காக ரவி வீட்டிற்கு சென்றுள்ளார். அங்கு ரவி வீட்டில் இருந்த அவரது மனைவி கொஞ்சம் தள்ளி நில்லுங்கள் நான் பெட்ரோலை எடுத்து வருகிறேன் என்று சொல்லியுள்ளார். அப்போது சிறிது நேரத்தில் அங்கு வந்த எதிரி ரவி என் அண்ணன் சரவணக்குமாரை பார்த்து இங்கு பெட்ரோல் விற்பது சம்மந்தமாக யார் உன்னிடம் சொன்னார் என்று கேட்டுள்ளார். அதற்கு தகவல் தெரிந்து தான் வந்தேன் என்று சொல்லியுள்ளார். அப்போது அவர் வீட்டின் முன்பே வைத்து எதிரி என் அண்ணனை தகாத வார்த்தையால் பேசி உள்ளார்.

2. அதோடு அன்றே மதியம் 01.00 மணியளவில் அசா.1 எனது அப்பாவிற்கு போன் செய்து இன்று உனது மகன் தப்பித்து ஓடிவிட்டான் என்றைக்காகவது பரளச்சி பக்கம் வந்தால் தலையை வெட்டி கொன்று

விடுவேன் என்று கூறியுள்ளார். இது சம்மந்தமாக அசா.1 எனது தந்தை புகார் கொடுத்தார். வீட்டில் வந்து இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் கு வி**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | STC 47/2023 |
| Deposition of witness for | :: | PW. 2 |
| Name | :: | கலா |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2024

---

எதிரி ஆஜர் .

24.06.2024

முதல் விசாரணை:

1. நான் தற்போது பரளச்சி அருகில் உள்ள ராஜகோபாலபுரத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 16.01.2023ம் தேதி காலை 11.00 மணியளவில் எனது மகன் பெட்ரோல் வாங்குவதற்காக ரவி வீட்டிற்கு சென்றுள்ளார். அங்கு ரவி வீட்டில் இருந்த அவரது மனைவி கொஞ்சம் பொறுங்கள் என்று சொல்லியுள்ளார். சிறிது நேரத்தில் அங்கு வந்த எதிரி ரவி என் மகனை பார்த்து இங்கு பெட்ரோல் விற்பது பற்றி யார் உன்னிடம் சொன்னார் என்று கேட்டுள்ளார். பின்னர் திரும்ப என் மகன் சரவணக்குமார் எங்கள் வீட்டிற்கு வந்து ரவி இப்படி பேசுகிறார் என்று எங்களிடம் சொன்னார்.

2. பின்பு மதியம் 01.00 மணிபோல் எதிரி ரவி எனது கணவர் அசா.1 போனுக்கு போன் செய்து உன் மகன் பரளச்சிக்கு வந்தால் கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் கு வி – இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | STC 47/2023 |
| Deposition of witness for | :: | PW. 1 |
| Name | :: | **சந்திரன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2024

---

எதிரி ஆஜர் .
24.06.2024
முதல் விசாரணை:

1. நான் தற்போது பரளச்சி அருகில் உள்ள ராஜகோபாலபுரத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 16.01.2023 ம் தேதி எனது மகன் சரவணக்குமார் பெட்ரோல் வாங்குவதற்காக ஆஜர் எதிரி வீட்டிற்கு சென்றுள்ளார். அப்போது அவரது மனைவி கொஞ்ச நேரம் காத்திருக்குமாறு சொல்லி உள்ளார். சிறிது நேரத்தில் எதிரி ரவி அந்த இடத்திற்கு வந்துள்ளார். அப்போது எதிரி ரவி என் மகனை பார்த்து இங்கு பெட்ரோல் இருப்பது பற்றி யார் உன்னிடம் சொன்னார் அந்த ஆளை காண்பி என்று சொல்லி உள்ளார். சிறிது நேரத்தில் எனது மகன் வீட்டிற்கு வந்துவிட்டார்.

2. சிறிது நேரத்தில் எதிரி ரவி எனது போனுக்கு போன் செய்து பரளச்சிக்கு மட்டும் உன் மகன் வந்தால் உன் மகனை கண்டம் துண்டமாக வெட்டி விடுவேன் என்றும் உன் மகனை சொல்லி வை என்று மிரட்டி என்னையும் சொல்ல முடியாத தகாத வார்த்தையால் திட்டினார். அதோடு நான் பரளச்சி காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு மற்றும் அதிலுள்ள கையெழுத்து

என்னுடையது. **(புகார்மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் கு வி**

**இல்லை.**